விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 177 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 240 வியாழக்கிழமை (13.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யுத்தம் நிறைவுற்று 15 ஆண்டுகளாகியும் வடக்கு மாகாணம் முன்னேறவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கவலை



(இளவாலை)
போர் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், வடக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பொருளாதார, சமூக மற்றும் வாழ்வாதாரப் பரப்புகளில் சாதகமான முன்னேற்றத்தை அடைய வில்லை இது ஒரு தூர 15

### சொத்துக்களை வெளிப்படுத்துவது கட்டாயம்

## 15 முக்கிய சட்டங்கள் விரைவில் நிறைவேறும்

(கொழும்பு)
எதிர்வரும்சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்டங்களை நிறைவேற்று வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக நீதி, சிறைச்சாலை கள் அலுவல்கள் 15

### பரு.ஆதார வைத்தியசாலை விடுதியில்

## இளம் மருத்துவர் சடலமாக மீட்பு

(பருத்தித்துறை)
பருத்தித்துறை ஆதார வைத்திய 15

# நினைவேந்துவது உரிமை அதைத் தடுக்கக் கூடாது

### ஜனாதிபதி நியமித்த குழு அறிக்கை

(கொழும்பு) நினைவேந்தல் செய்வதற்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன் இன மோதல் சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் தடுப்பதற்கான ஏற்பாடுகளும் நல்லிணக்கத்தினூடாக உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு நினைவேந்தல் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.



02

## டிப்பர் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

### நுணாவிலில் சம்பவம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட் 15

## தபால் ஊழியர்கள் இன்று சுகயீன விடுமுறை

(கொழும்பு)
தபால் ஊழியர்கள் இன்று முதல் சுகயீன விடுமுறை தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர். ஊழியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த சுகயீன விடுமுறை தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. 15

## சீனக் கடலட்டைப் பண்ணைகளால் சுதேச மீன்பிடித்துறைக்கு பாரிய பாதிப்பு

### ஜெனிவாவில் சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு



(ஜெனிவா)
சீனா மூலம் வடக்கு கடற்பரப்பில் கடலட்டை திட்டங்களை நடைமுறைப்படுத்துவது பொருளாதார ரீதியில் நன்மையாக இருந்தாலும் குறித்த வேலைத்திட்டங்கள் மூலம் வடக்கின் மீன்பிடித் துறைக்கு பாரிய பாதிப்பு 16

## அநுர இன்று லண்டன் விஜயம்

(கொழும்பு)
தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இன்று லண்ட 15

## நாட்டின் எதிர்காலம் மக்களின் கைகளிலேயே

### ஜனாதிபதி ரணில்



5ஆம் பக்கம் பார்க்க

## அனலைதீவு மீனவர்கள் தமிழகத்தில் கரைசேர்ந்தனர்

(நாகப்பட்டினம்)
யாழ்ப்பாணம், அனலைதீவில் இருந்து மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற நிலையில் காணாமல்போன மீனவர்கள் இருவரும் 15

கைகளுக்கும் மனதுக்கும் நிறைவைத் தரும் சிறிய அளவிலே நன்மைகள் அதிகம்
நாளாந்த செலவுகளுக்கு
அத சம்பத

NLB
தேசிய லொத்தர்
75
சீட்டிழுப்புக்களிலே
ரூ.250,000
வெற்றியாளர்கள்
100
ரூ.50,000
வெற்றியாளர்கள்
2,419
வாங்கி உயர்வடைவோமா?
ஆங்கில எழுத்துக்கு ரூ.80
02 இலக்க நிரைக்கு ரூ.1,000
03 இலக்க நிரைக்கு ரூ.4,000
04 இலக்க நிரைக்கு ரூ.50,000
ஆங்கில எழுத்து மற்றும் 04 இலக்கங்களுக்கு ரூ.250,000
நாளாந்த செலவுகளுக்கு அத சம்பதவை அதிகமதிகம் கொள்வனவு செய்யுங்கள்
(2318)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவேந்துவது...

இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரம் காரணமாக உயிரிழந்தவர்களை நினைவு கூருவது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

சிரேஷ்ட பேராசிரியர் ஜகத் வீரசிங்க, கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர, யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் டி. சனாதனன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பர்ஸானா ஹனீபா, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் துஷாரி சூரியாராச்சி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானாரச்சி ஆகியோர் உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

22-05-2023 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

1983-2009 காலகட்டத்தில் இலங்கையில் நடந்த ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரங்கள் என்பவற்றினால் உயிரிழந்த பொது மக்கள், ஆயுதப்படை உறுப்பினர்கள், பொலிஸார், முன்னாள் போராளிகள் உட்பட அனைவரையும் நினைவுகூரும் வகையில் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தின் அடையாளமாக நினைவிடமொன்றை அமைப்பது குறித்து இந்தக் குழு ஆய்வு செய்தது.

இதற்காக, நிபுணர் குழு கடந்த நாட்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் அமர்வுகளை நடத்தியதுடன், ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நிபுணர்களுடன் ஆலோசனைகளையும் நடத்தியது.

நினைவேந்தல் செய்வதற்கான மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்தியதோடு பல்வேறு குழுக்களும் தனிநபர்களும் நினைவேந்தல் மற்றும் நல்லிணக்க நிகழ்வுகளை வெவ்வேறு வழிகளில் முன்னெடுப்பதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. வளமான அறிவுக் கட்டமைப்பையே இது வெளிப்படுத்துவதாக சுட்டிக்காட்டியுள்ள நிபுணர் குழு, நாட்டின் மோதல்கள் தொடர்பான கடந்த காலத்தைப் பற்றி அறிக்கையிடவோ, கருத்துத் தெரிவிக்கவோ அல்லது வேறுவிதமாகக் கையாளும் முயற்சியின் போது இந்தப் பங்களிப்புகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த சந்திப்புகளின் போது முன்வைக்கப்பட்ட பரந்த அளவிலான யோசனைகளை பரிசீலித்த பின்னர் இந்தக் குழு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இலங்கையின் மோதல்கள் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுடன் உருவான கலை மற்றும் கலாசார வெளிப்பாடுகளை பாதுகாத்து வைக்கும் குறியீட்டு ரீதியிலான கட்டடமொன்றை அமைக்கவும் குழு பரிந்துரைத்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக கூட்டு அர்ப்பணிப்பை உறுதி செய்வதும் அனைத்து இலங்கையர்களிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.

குழுவின் அறிக்கையைக் கையளித்த போது ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் உடன் இருந்தார். (ந-7,10)

## வேலணை மத்திய கல்லூரியின் கண்ணீர் அஞ்சலிகள்



எமது கல்லூரியின் கணக்கியல் ஆசிரியர் **திரு.குணரட்ணம் சபேசன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் **ஐயம்பிள்ளை குணரட்ணம்**

பிறப்பு 02.05.1948 இறப்பு 11.06.2024

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து துயர் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கல்லூரிச் சமூகம்**

**யா/வேலணை மத்திய கல்லூரி**

(C-0584)

# மரண அறிவித்தல்



மலர்வு 1953.09.28 உதிர்வு 2024.06.10

## இரத்தினம் அரியமலர்

அளவெட்டி வடக்கு அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் அரியமலர் அவர்கள் 10.06.2024 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரி - செல்லம்மா தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் இரத்தினம் அவர்களின் அன்புக்குரிய மனைவியும் நடராசா(மலேசியா), காலஞ்சென்ற இலட்சுமணன், செல்வராசா, அன்புமலர்(கனடா), காலஞ்சென்ற ஜோதிராஜா மற்றும் அமுதமலர்(அவுஸ்திரேலியா), இந்துமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யசோதா, அருள்வாணி(பிரான்ஸ்), பிரபாகரன்(பிரான்ஸ்), கிருபாகரன்(பிரான்ஸ்), கிருஷாந்தி, பாஸ்கரன்(ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுசிலன்(குவைத்), சுரேஸ்குமார்(பிரான்ஸ்), தர்சிகா(பிரான்ஸ்), அனித்தா(பிரான்ஸ்), சிவகாந்தன்(குவைத்), தர்மிகா(ஜேர்மன்) ஆகியோரின் மாமியும் ஜானுஷா, துஷானா, திஷானா, ஜானுஷன், நிக்ஷனா, சுபிக்ஷன், கசைந், கரீஸ், கர்ஜித், அகிஷா, அக்ஷயன், அக்ஷன், கீர்த்தனா, அர்ஜனா, லக்ஷனா, ரிகான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி தெற்கு வைரவர் அடைப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (1194)

அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

076 707 3245
077 306 4069

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளில்

## 31 ஆம் நாள்



பிறப்பு
22.05.1942

இறப்பு
14.05.2024

## அமரர். திருமதி. கந்தையா பூரணம்

(வேம்போடுகேணி, பளை)

நீங்காத நினைவுகளில்
என்றும் நிலைபெற்ற அம்மா!
தூங்காத விழிகளாய் உழைத்து
எமை வளர்த்தீர்கள்!
மின்னாமல் முழங்காமல்
விழி மூடிப் போனீர்கள்!
எந்நாளும் நாம் வாழ
கரம் தந்தீர்கள்– இன்றோ
உங்கள் அழகு முகம்
பொலிவிழக்கா நிலைகாட்டியே
இறுதி விடை பெற்றீர்கள்!
கல்வெட்டில் உங்கள்
கருணைக் கதை
எழுதத்துடித்தேன் அம்மா!
ஆனால் கல்நெஞ்சர் ஜவரின்
கயமையினால்
துவண்டேன் அம்மா!
என் வழித்துணையாய்
எந்நாளும் வந்து
வாழ வழி காட்டுங்கள்
அம்மா...

இத்தாவில்,
பளை.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
க.சுந்தரலிங்கம் (மகன்) குடும்பம்.

(c-582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட கபடி போட்டி

# வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியது

# தும்பளை சிவப்பிரகாச ம.வி



தேசிய மட்ட கடற்கரை கபடிப் போட்டியில் பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய பெண்கள் அணி வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

இலங்கை பாடசாலைகள் கபடிச் சங்கம் நடத்திய தேசிய மட்ட கடற்கரை கபடிப் போட்டி திருகோணமலை கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது.

20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியின் இறுதியாட்டத்தில் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய அணியை எதிர்த்து அக்கிரபோதி மகாவித்தியாலய அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். இருப்பினும் இறுதியில் 6 புள்ளிகள் வித்தியாசத்தில் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய அணி தோல்வி அடைந்தது வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-90)

# இந்து சகோதரர்களின் போர் நாளை ஆரம்பம்







மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் சாவகச்சேரி இந்து கல்லூரிக்கும் இடையிலான இந்து சகோதரர்களின் போர் என வர்ணிக்கப்படும் துடுப்பாட்ட போட்டியானது நாளை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளது.

குறித்த போட்டியானது நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து இரு பாடசாலை மாணவர்களுக்கான இருபது-20 துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# சுப்பர்-8 வாய்ப்பை தவறவிட்டது இலங்கை அணி

இருபது-20 உலகக்கிண்ண போட்டியில் இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான டி குழுவுக்கான போட்டி கடும் மழையினால் முழுமையாக கைவிடப்பட்டது.

இப் போட்டி முடிவை அடுத்து இலங்கையின் சுப்பர்-8 சுற்று கனவு கலைந்து போயுள்ளது.

இதனை அடுத்து இலங்கைக்கும் நேபா ளத்துக்கும் தலா ஒரு புள்ளி கிடைத்தது.

இந்தப் போட்டி கைவிடப்பட்டதால் தென் ஆபிரிக்கா முதலாவது அணியாக சுப்பர்-8 சுற்றில் விளையாடுவது உறுதி செய்யப்பட் டுள்ளது.

இலங்கையும் நேபாளமும் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற கட்டாய நிலையில் இப் போட்டியை எதிர்கொள்ள தயாராக இருந்தன. ஆனால், முழு நாளும் கடும் மழை பெய்ததால் சுமார் 3 மணித்தியாலங்களின் பின்னர் ஆட்டம் கைவிடப்பட்டதாக உத்தியோகபூர்வ மாக அறிவிக்கப்பட்டது. (4-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலம் மக்களின் கைகளிலேயே

## ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

நாட்டு மக்கள் மீண்டும் மருந்து, உரம், எரிவாயு, எரிபொருள் வரிசைகளில் நிற்க நேரிடும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ் நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்ல முடியும் என்ற திருப்தி மக்களுக்கு இருக்குமாயின் அந்த வேலைத்திட்டத்துடன் முன்னேறிச் செல்ல முடியும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு பத்தரமுல்லை வோடர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், தேர்தல்களின் போது நபர்களை பார்த்து தீர்மானம் எடுக்கும் கடந்த கால அரசியல் தவறுகளை மீண்டும் செய்ய வேண்டாம், நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புக்காக சமர்பிக்கப்பட்டிருக்கும் சட்ட மூலத்தை நிறைவேற்ற ஆதரவளிக்க வேண்டும், அதற்கு மாறாக நாட்டின் முன்னேற்றுத்துக்கான வேறு திட்டங்களை வைத்துள்ளவர்கள் அதனை நாட்டுக்கு அறிவிக்க வேண்டும்.

இன்று அரசியல்வாதிகள் பலதரப்பட்ட வாக்குறுதிகளை வழங்குகின்றனர். அவர்களில் எவரும் நாட்டின் முன்னேற்றுத்துக்கான கொள்கைகளை முன்மொழியவில்லை.

உங்கள் எதிர்காலத்தை பொறுப்பேற்க அவர்கள் தயாராக இல்லாத பட்சத்தில் உங்களின் எதிர்கால முன்னேற்றத்தை நீங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

அதற்கான வேலைத் திட்டம் மிக அவசியமானது. உங்கள் அறிவு மேம்பாட்டிற்காக ஏனைய அதிகாரிகள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை சந்திக்கவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். புதிய திட்டங்களை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

பழைய முறைமைகளில் சிக்கிக் கிடப்பதை விடுத்து துரித அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6)

லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1175)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

# அரசியலமைப்புக்கு முரணாக தேர்தலை ஒத்திவைக்க முடியாது

## மொட்டுக்கட்சி எச்சரிக்கை



(கொழும்பு)

அரசியலமைப்புக்கு முரணாக தேர்தலை ஒத்திவைக்க முடியாது எனவும், அவ்வாறான செயலை செய்தால் அது ஐக்கிய தேசியக் கட்சியின் முட்டாள் தனமான முடிவு எனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சி கூட்டமொன்றில் இதனை கூறியுள்ளார்.

"இப்போது நாட்டு மக்கள் மொட்டுக்கட்சி மீது பெரும் நம்பிக்கையை வைத்துள்ளனர்.

எமது கட்சியின் சில உறுப்பினர்கள் வெளியேறினாலும் எதனையும் இழக்கவில்லை.

அதை விட இன்று நாம் பலமாக இருக்கின்றோம். தேர்தலை நடத்த வேண்டும். அரசியலமைப்புக்கு முரணாக தேர்தலை ஒத்திவைக்க முடியாது.

ஐக்கிய தேசிய கட்சி அவ்வாறு செய்யும் என்று நான் நினைக்கவில்லை. அது ஒரு முட்டாள் தனமான விடயம்.

ஐக்கிய தேசியக் கட்சி அவ்வாறானதொரு செயலைச் செய்தால் அது ஐக்கிய தேசியக் கட்சியின் தனிப்பட்ட முடிவாகும்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து நாங்கள் எதுவும் கூற மாட்டோம். சரியான நேரத்தில் சொல்வோம். மொட்டுவின் வெற்றிக்காக மக்கள் காத்திருக்கின்றனர். வேறு கட்சிகளுக்காக அல்ல என்றார்.(4-6)



# மரண அறிவித்தல்

பிறப்பு 01 - 01 - 1966



இறப்பு 12 - 06 - 2024

அமரர். துரைராஜா சிவானந்தன்

யாழ்ப்பாணம் வைமன் வீதியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, இலுப்பையடியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா சிவானந்தன் அவர்கள் 12.06.2024 புதன்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 13.06.2024 வியாழன் மதியம் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(1189)

258/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.
077 603 3650

# இராசிபலன்

13.06.2024
வைகாசி 31, வியாழக்கிழமை,
சப்தமி முன்னிரவு 10.25 மணிவரை

பூரம் முழுவதும்
சுபநேரம் -7.22-8.52 மணிவரை
இராகுகாலம் -1.22-2.52 மணிவரை

சந்திராஷ்டமம்.
உத்தராடம்.

வளவன்

**மேஷம்**: அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**கடகம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்**: பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மகரம்**: உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**: தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**சிம்மம்**: வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் உருவாகும், அடுத்தவர் விவகாரங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**: குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

**மிதுனம்**: இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கன்னி**: சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள்.

**தனுசு**: வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மீனம்**: உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழிலில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

வீரமும் விவேகமும் ஒருங்கே இருப்பதே சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி

# அதிபர், ஆசிரியர்கள் போராட்டம்

(சாவகச்சேரி)

**அதிபர்-ஆசிரியர்களுடைய சம்பள முரண்பாட்டை நீக்க வலியுறுத்தி நேற்று புதன்கிழமை யாழ் மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களிற்குட்பட்ட பாடசாலைகளில் கடமை யாற்றும் அதிபர், ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



இதன்போது "சுபோதினி ஆணைக்குழுவின் எஞ்சிய மூன்றில் இரண்டு பங்கு சம்பள உயர்வை வழங்கு, மாணவர் களுக்கான போசாக்கு நிலையை உறுதிப்படுத்து, பெற்றோர் மீது சுமையை அதி கரிக்காதே, அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண் பாட்டை நீக்கு, அதிபர்,ஆசிரி யர்களை ஏமாற்றாதே மற்றும் பிள்ளைகளின் கல்வி உரி மையை உறுதிப்படுத்துக" உள் ளிட்ட சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது சுமார் 30 ஆசி ரியர்கள் போராட்டத்தில் பங் கெடுத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.(4-6-30-33-60-285)

# மோ.சைக்கிளை உடைத்து தொலைபேசி திருடியவர் மறியலில்

(கரணவாய்)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் காணப்பட்ட தொலைபேசி திரு டப்பட்ட சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்ட துடன் தொலைபேசி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்ற வழக்கு நடவடிக்கை ஒன்றிற் காக கடந்த திங்கட்கிழமை சென்ற பெண் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை நீதி மன்றத்திற்கு முன்பாக வீதி ஓரத்தில் நிறுத்தியிருந்த நிலையில் அவரது சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெறு மதியான ஐபோன் தொலை பேசியினை இருக்கை பகுதிக்கு கீழாக உள்ள பகுதியில் வைத்து பூட்டிவிட்டு வழக்குக்கு சென்றுள்ளார்.

வழக்கு முடிந்த பின்னர் வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிளின் பின் இருக்கைப் பகுதி உடைக்கப்பட்டு அதினுள் வைக்கப்பட்டிருந்த தொலை பேசி திருடப்பட்டிருந்தமை தெரியவந்தது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பெண் முறைப்பாட்டினை பதிவு செய் திருந்தார்.

விசாரணைகளை முன் னெடுத்த பொலிஸார் திருடப் பட்ட தொலைபேசி பாதுகாப்பு குறியீடு இடப்பட்டிருந்த நிலை யில் அதனை மந்திகை பகுதி யில் உள்ள கைபேசி திருத்த கம் ஒன்றிற்கு கொண்டு சென்ற போது அங்கு வைத்து பொலி ஸாரால் குறித்த நபர்கைது செய்யப்பட்டதுடன் தொலைபேசி யும் மீட்கப்பட்டது.

சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் பொலிஸாரால் முற்படுத் தப்பட்டிருந்தார். இதன்போது பெண் தொலைபேசியை உரிமை கோரும் வகையில் அதற்குரிய ஆவணங்களை மன்றில் சமர்ப்பித்து அடை யாளம் காட்டப்பட்டிருந்தது. இதையடுத்து வழக்கு நடவ டிக்கையின் பின்னர் குறித்த தொலைபேசி பெண்ணிடம் வழங்கப்பட்டதுடன் சந் தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு பருத்தித் துறை நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தர விட்டார். (4-6-60)

# மோட்டார் ஷெல் அடையாளம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மட்டுவில் சந்திர புரம் கிராமத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் வெடிக் காத நிலையில் மோட்டார் ஷெல் ஒன்று அடை யாளம் காணப்பட்டுள்ளது.

வாய்க்கால் வெட்டும் போது மேற்படி வெடிபொருள் அடை யாளம் காணப்பட்டுள்ள நிலை யில் அது தொடர்பாக சாவகச் சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸார் வெடிபொருளை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.(4-6-30)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல், கண்ட கல் என்பன நாளை மறுதினம் காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதி மன்ற வளாகத்தில் வைத்து பிரந்திய ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என பருத் தித்துறை நீதிவான் நீதி மன்ற பதிவாளர் அறிவித்துள் ளார். (4-6)

# இராஜகோபுர அடிக்கல் நாட்டல்

(கரணவாய்)

வடமராட்சி நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடு இடம் பெற்று அனுக்சை, கணபதி ஹோமம், வஸ்து சாந்தி சங்கு பூசை இடம்பெற்று காலை 10 மணி முதல் சங்கு ஸ்தாப னம் ஆரம்பமாகி நடை பெறும். (4-6-60)

# வீதித்தடை

(யாழ்ப்பாணம்)

கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில் இல. 331, கோவில் வீதி நல்லூர் என்னும் இடத்தில் நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுகூடல் அமைப்பின் அடையாள வளைவு அமைத்தல் வேலை யின் பொருட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் ஜூலை 3 ஆம் திகதி வரையான இரு வார காலத்திற்கு கோவில் வீதியில் கைலாசப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மித்த பகு தியில் வீதியினை மூடவுள்ளது.

இக்காலத்தில் இவ் வீதி களினை பயன்படுத்துவோர் போக்குவரத்தினை சிரமமன்றி மேற்கொள்ள மாற்றுப்பாதை யினை பயன்படுத்துமாறு யாழ்.மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் அறி வித்துள்ளார். (4-6)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை வெட் டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நேற்று முன் தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் உற்சவங்கள் இடம் பெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் எதிர் வரும் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திரு விழாவும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு கொடி யிறக்க வைபவமும் இடம் பெறும் என ஆலய பரி பாலன சபையினர் அறி வித்துள்ளனர். (4-6)

# காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் குரல் கொடுப்போம்

## எரான் விக்கிரமரட்ண

(யாழ்ப்பாணம்)

யுத்தம் நடந்த பிரதேசத்தில் காணாமலாக்கப்பட்டோர் பிரச் சினை தொடர்பில் எந்த நடவ டிக்கையும் முன்னெடுக்கப்பட வில்லை. அதற்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ண தெரி வித்துள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித் தார். யாழ் நகரின் தீவுப் பகுதியின் போக்குவரத்து, மக்களின் கல்வி நிலை அடிப்படை வசதிகளில் ஒன்றான தண்ணீர் பிரச் சினை இன்றும் இந்த ஆட்சி யில் தொடர்ந்து கொண்டிருக் கிறது.

யுத்தம் நடந்த பிரதேசம் காணாமலாக்கபட்டவர் பிரச் சினை தொடர்பில் இங்கு எந்த நடவடிக்கையும் முன்னெடுக்க படவில்லை அதன் அடிப்படை யில் நாம் தொடர்ந்து அதற்காக குரல்கொடுப்போம் எனத் தெரி வித்தார். (4-6-30)



யாழ்.தின்னர் லேனில் அமைந்துள்ள பரிபேதுரு முன்பள்ளியில் நேற்றைய தினம் சிறுவர் சந்தை நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்க் அமைப்பின் செயலாளருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சார்க் அமைப்பின் செயலாளர் நாயகம் கோலம் சர்வார்க்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

அதன்படி சார்க் நாடுகளுக்கு இடையிலான பல்வேறு திட்டங்கள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் பக்கச்சார்பற்ற தலையீடுகளை மேற்கொள்ளுமாறு சார்க் பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கோரியுள்ளார்.

இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன் சார்க் நாடுகளிடமிருந்து பெறக்கூடிய ஆதரவு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் நவீன கலைக்கான சார்க் கலாச்சார மையத்தை மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அதிகாரிகள் குழுவொன்று கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-6)

# சம்பள முரண்பாடு நிபுணர்குழு நியமனம்

(கொழும்பு)

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிபுணர் குழுவொன்றை நியமித்துள்ளார்.

அரச சேவையில் உள்ள பல்வேறு சேவைப் பிரிவுகளுக்கிடையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் குறித்து உரிய கவனம் செலுத்தி, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், அரச சேவையின் அனைத்துத் துறைகளிலும் உள்ள சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வு செய்து, திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளை நிபுணர் குழு சமர்ப்பிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தமது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை 3 மாதங்களுக்குள் ஜனாதிபதிக்கு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (4-6)

# சுற்றுலா வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி

(கொழும்பு)

சுற்றுலா வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான விதிமுறைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது

2023 ஆம் ஆண்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறை இலக்கம் 2 இன் படி, இலங்கைக்கான மோட்டார் வாகனங்களின் இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

ஆனால் சுற்றுலா மற்றும் காணி அமைச்சரின் முன்மொழிவின்படி, போக்குவரத்துக்காக 250 மினி பஸ்கள் மற்றும் 75 வான்களுக்கு கடந்த 1 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது.

அதன்படி மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. (4-6)

# எம்.பியின் கார் மோதி இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பயணித்த ஜீப் வாகனம் மோதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

8 நாட்களாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 22 வயதுடைய இளைஞனே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பிரதான வீதியில் கொங்கஸ்தெனிய சந்திக்கு அருகில் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பயணித்த ஜீப் இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக வட்டுபிட்டியல ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் இளைஞனின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால் விபத்து இடம்பெற்ற நேரம் முதல் அவர் சுய நினைவின்றி இருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். (4-6)

# இரசாயன வாயுவை சுவாசித்த 30 பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

இரசாயன நச்சு வாயுவை சுவாசித்த 30 பேர் பாணந்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை - நல்லுருவ பிரதேசத்தில் உள்ள அழகு சாதன உற்பத்தி தொழிற்சாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அழகுசாதன உற்பத்திப் பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலையொன்றில், பொருட்களுக்கான கலவைகளை மேற்கொள்ளும் போதே இந்த இரசாயன கசிவு ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து, தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6)

# மைத்திரிபாலவின் தடை 19 வரை நீடிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட தடையை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு நேற்று கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6)


## கிருஸ்ணா அடைவு கடை

பதிவு இல J/ DS/ BR/ 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2023 ஆம் ஆண்டு 31.09.2023 இற்கு முன்னர் அடைவு வைத்த நகைகள் யாவற்றையும் 2024 ஆம் ஆண்டு ஆடி மாதம் 15 ஆம் திகதி (15.07.2024) இற்கு முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.07.2024 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**(குறிப்பு:- 2023 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் 31 ஆம் (2023.09.31) திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.)**

(1133)

இல: 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
021 490 0311
021 222 5180,077 080 4656.

உரிமையாளர்.
இல- 09, கன்னாதிட்டி வீதி.
யாழ்ப்பாணம்
021 222 5046



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா: 62 1/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L, France(PR)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/4302

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 47
உயரம்:5'10"
தகைமை/தொழில்:B.ICT, ICT Officer
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தொழில்
தொ.இ: B/13458

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்:5'7"
கி.பா: 27
தகைமை/தொழில்: BA,MA, Information Assistant
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: B/13543

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா:16 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:HND IT, B.Com, Bsc, Banker
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம், தனியார் பட்டதாரி
தொ.இ: G/10870

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா:30
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA, DO
எதிர்பார்ப்பு: அரச/ தனியார் உத்தியோகம்
தொ.இ: G/13551

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Bsc, Teacher
எதிர்பார்ப்பு:அரச வேலை,
வெளிநாடு: (லண்டன் கனடா)
தொ.இ: G/13037

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## திபெத்தில் பல இடங்களுக்கு புதிய பெயர் சூட்ட திட்டம்

### சீனாவுக்கு இந்தியா பதிலடி

(டில்லி)

அருணாச்சல பிரதேசத்தில் பலஇடங்களுக்கு சீனா புதிய பெயர்சூட்டிவரும் நிலையில் அந்நாட்டுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் திபெத்தில் 20 இற்கும் மேற்பட்ட இடங்களுக்கு புதிய பெயர் சூட்ட இந்தியா திட்டமிட்டுள்ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சல பிரதேசத்தை தெற்கு திபெத் என்று கூறிவரும் சீனா அங்குள்ள பல இடங்களுக்கு தன்னிச்சையாக புதிய பெயரைச் சூட்டிவருகிறது.

சீனா முதன்முதலில் கடந்த 2017 இல் அருணாச்சல பிரதேசத்தின் 6 இடங்களுக்கு புதிய பெயர் சூட்டியது. இதையடுத்து 2021 இல் 15 இடங்களுக்கும் 2023 இல் 11 இடங்களுக்கும் புதிய பெயர்களை அறிவித்தது.

சீனா கடைசியாக கடந்த மார்ச் மாதம் அருணாச்சல பிரதேசத்தில் கட்டுப்பாட்டு எல்லைக் கோடு நெடுகிலும் உள்ள 11 குடியிருப்பு பகுதிகள், 12 மலைகள், 4 ஆறுகள்,ஓர் ஏரி, ஒரு கணவாய் மற்றும் ஒரு நிலப்பகுதிக்கு புதிய பெயர்களை சூட்டியது.

சீனாவின் இந்த நடவடிக்கையை இந்தியா தொடர்ந்து நிராகரித்து வருகிறது. அருணாச்சல பிரதேசம், இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் அங்குள்ள இடங்களுக்கு மறுபெயர் சூட்டுவதால் யதார்த்த நிலை எந்த விதத்திலும் மாறிவிடாதுஎன்றும் வெளியுறவு அமைச்சகம் எதிர்த்து வருகிறது.

இந்நிலையில் சீனாவின் இந்தநடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அந்நாட்டின் தன்னாட்சிப் பகுதியான திபெத்தில்20 இற்கும் மேற்பட்ட இடங்களுக்கு புதிய பெயர் சூட்ட இந்தியா திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பெயர் மாற்றம் செய்யப்பட உள்ள இடங்களின் பட்டியல் இராணுவத்தின் மூலம் இறுதி செய்யப்பட்டு விரைவில் வெளியிடப்படும் என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-6)

## சூரியப் புயல்! நாசா எச்சரிக்கை



(வோஷிங்டன்)

மிதமான சூரியப் புயல் பூமியைத் தாக்கலாம் என நாசா தகவல் வெளியிட்டுள்ளது.

இதனால் தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள் அதிகம் பாதிக்கப்படலாம் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

குறித்த சூரியப் புயல் தாக்கமானது 2017ஆம் ஆண்டிற்குப் பின் பூமியில் ஏற்படவுள்ள மிக வலுவான தாக்கம் என நாசா குறிப்பிட்டுள்ளது. (4-6)

## தென் கொரியாவில் நிலநடுக்கம்.

(சியோல்)

தென் கொரியாவின் தென் மேற்கு பகுதியில் நேற்று அதிகாலை நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.8 மெக்னிடியூட் அலகுகளாகப் பதிவானதாகவும், பூமிக்கு அடியில் 8 கிலோமீற்றர் (5 மைல்) ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகவும், தென் கொரியா வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் கொரியாவின் தென் மேற்கு மாவட்டமான புவான் அருகே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4-6)

## 100 வயதில் திருமணம்



(வோஷிங்டன்)

தனது 100 வயதில் இரண்டாம் உலக போரில் பங்கேற்ற அமெரிக்க முன்னாள் போர் வீரர் ஒருவர் காதலியை கரம் பிடித்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.ஹரால்டு டெரன்ஸ் என்ற அந்த வீரர் தனது 100 ஆவது வயதில், 96 வயதாகும் தனது காதலியான ஜீன்ஸ் வெர்லினை கரம் பிடித்துள்ளார்.பிரான்ஸில் நார்மாண்டி பகுதியில் இவர்களது திருமணம் நடைபெற்றுள்ளது.அந்த நகரத்தின் மேயர், ஹரால்டு டெரன்ஸ்-ஜீன்ஸ்வெர்லின் திருமணத்தை நடத்தி வைத்துள்ளார். (4-6)

## யுத்தங்களில் உ...

## பல மடங்காக...

### நோர்வே அமைப்...

(ஒஸ்லோ)

**சர்வதேச அளவில் உள்நாட்டு ... உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை ... லாதவாறு அதிகரித்துள்ளமை ... வந்துள்ளது.**



எத்தியோப்பியாவின் டைகிரே பிராந்தியத்திலும் உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு காரணமாகவும் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் காரண...

## ஏமன் படகு விபத்து பலி எண்ணிக்கை உயர்வு

(ஏமன்)

சுமார் 260 புலம் பெயர்ந்தோருடன் பயணித்த படகொன்று ஏமன் அருகே கடலில் மூழ்கியதில் 49 பேர் வரை உயிரிழந்துள்ளதுடன், 140 பேரை காணவில்லை என ஐ.நா சர்வதேச அமைப்பு அறிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 6 சிறுவர்களும் 31 பெண்களும் அடங்குவதாக குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது.

சோமாலியா மற்றும் எத்தியோப்பியாவைச் சேர்ந்த புலம்பெயர்வோரை ஏற்றிச்சென்ற படகொன்று இவ்வாறு கடலில் மூழ்கி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த சம்பவத்தையடுத்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த புலம்பெயர்வோருக்கான ஐ.நா சர்வதேச அமைப்பின் செய்தித் தொடர்பாளர் முகமதலி அபுனஜெலா,

புலம்பெயர்வோர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு விரைவாக தீர்வு காண்பதற்கான மற்றுமொரு நினைவூட்டலாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அவசரமாக புலம்பெயர்வோர் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காண்பதோடு, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தையும் வலியுத்தியுள்ளார்.

இதேவேளை, பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் இருந்து வளைகுடா நாடுகளுக்கு புலம்பெயர்வோர் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும் புலம்பெயர்வோருக்கான ஐ.நா சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது. (4-6)

யு...

செ...



(ே...

"ய...

கலை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழப்பவர்கள் ...க அதிகரிப்பு!

## ...மைப்பு சுட்டிக்காட்டு

**...டு மோதல்கள், போர்க்களங்களில் ...கை மூன்று தசாப்தங்களில் இல் ...மை புதிய ஆய்வின் மூலம் தெரிய**



ண
ஸ்
ண

மாகவும் பொதுமக்களின் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன என ஒஸ்லோவின் சமாதான ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

2023 இல் 122,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர், உக்ரைனில் 73, 000 பேரும் காசாவில் 23,000 பேரும் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளது.

உலகில் இடம்பெறும் மோதல்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. 34 நாடுகளில் 59 மோதல்களங்கள் காணப்படுகின்றன என நோர்வே அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகில் வன்முறை உச்சத்தில் உள்ளது. மோதல் நிலபரப்பு சிக்கலான முறையில் மாற்றமடைந்துள்ளது என இந்த அறிக்கையை தயாரித்துள்ள பேராசிரியர் சிறி ஆஸ் ரஸ்டாட் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் மிகவும் வன்முறை மிகுந்த மோதல்களை காண்கின்றோம். அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை என தெரிவித்துள்ள அவர் இது சர்வதேச போட்டியாக மாறியுள்ளது யார் யாரை ஆதரிப்பது என்ற நிலை காணப்படுகின்றது. இது மிகவும் சவாலன சர்வதேச சூழ்நிலையை உருவாக்கியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மோதல்கள் மிகவும் குழப்பகரமானவையாக வந்துள்ளன, அரைவாசிக்கும் மேற்பட்ட நாடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட மோதல்கள் இடம்பெறுகின்றன. ஏழு நாடுகளில் ஒரே நேரத்தில் மூன்று மோதல்கள் இடம்பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்தியகிழக்கிலும் ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் ஐ.எஸ் அமைப்பும் ஏனைய இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளும் காணப்படுவது இதற்கு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-6)

# மலாவி துணை ஜனாதிபதி விமான விபத்தில் பலி



(லிலோங்வே)

மலாவியின் துணை ஜனாதிபதி சவுலோஸ் சிலிமா மற்றும் அவரது மனைவி உள்ளிட்ட 9 பேர் பயணம் செய்த விமானம் வீழ்ந்து நொறுங்கியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது. துணை ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் உயிரிழந்ததாக மலாவி ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

குறித்த விபத்து கடந்த 10 ஆம் திகதி காலை இடம் பெற்றது.

இதேவேளை. விமான விபத்தில் உயிரிழந்த மலாவியின் துணை ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மற்றவர்களுக்கும் இரங்கல் தெரிவித்துள்ள மலாவி ஜனாதிபதி. இறுதிச் சடங்கு வரை துக்கம் அனுசரிக்கப்படும் என்றும் தேசியக் கொடியை அரசு அலுவலகங்களில் அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறும் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# அமெ.ஜனாதிபதியின் மகன் குற்றவாளியாக அறிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனின் மகன் ஹன்டர் பைடனை குற்றவாளியாக அந்நாட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

போதைப் பொருள் பழக்கம் இல்லை என பொய் கூறி கடந்த 2018 ஆம் ஆண்டு துப்பாக்கி வாங் கியமை உட்பட மூன்று வழக்குகளில் ஹன்டர் பைடன் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் ஹன்டர் பைடனுக்கு அதிக பட்சமாக 25 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அந்நாட்டு சட்ட வல்லுநர்கள் தெரிவித்தனர்.

எனினும், முதல் முறை குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படுமா என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4-6)

# யுரேனஸ் கிரகத்திற்கு செல்வதே என் கனவு

## எலோன் மஸ்க்



(வோஷிங்டன்)

"யுரேனஸ்ஸிற்கு மனிதர்களை அனுப்புவதே தனது கனவு" என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஸ்தாபகரும் உலகின் மிகப்பெரும் செல்வந்தருமான எலோன் மஸ்க் தெரிவித்துள்ளார்.

எலோன் மஸ்க் அண்மையில் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது "இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நான்காவது கிரகமான செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்ப உள்ளோம்.

மேலும் செவ்வாய் கிரகத்தில் மில்லியனுக்கும் அதிகமான மனிதர்களை அனுப்புவது தான் எனது அடுத்த கட்டத் திட்டம்.

இந்தத் திட்டம் வெற்றி அடைந்த பின்னர், அடுத்து ஏழாவது கிரகமான யுரேனஸ்க்கு மனிதர்களை அனுப்புவதே எனது கனவு" இவ்வாறு எலோன் மஸ்க் பதிவிட்டுள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி அதிகாரத்தை நீடிக்க மறைமுக முயற்சி - பேராயர்



(கொழும்பு)

மக்களின் உரிமையை பறிப்பதற்கு இடமளிக்க முடியாது என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரசியல் சாசனத்திற்கு அமைவாக ஜனாதிபதியின் பதவிக் காலம் பூர்த்தியாவதுடன் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள் ளார். ஜனாதிபதியின் ஐந்தாண்டு பதவிக் காலத்தின் பின்னர் தேர்தல் நடத்தப்படுவது மக்களின் உரிமை களில் ஒன்று என அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

இந்த உரிமையை தட்டிப் பறிப்ப தற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது எனவும், சிலர் தங்களது ஆட்சி அதி காரத்தை மேலும் சில ஆண்டுக ளுக்கு நீடித்துக்கொள்ள மறைமுக முயற்சிகளை மேற்கொண்டு வருவ தாகவும் பொது வாக்கெடுப்பு நடத்தும் சாத்தியம் குறித்து ஆராயப்படு வதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் அவ்வாறான முயற்சி களுக்கு இடமளிக்கக் கூடாது எனவும், நாட்டு மக்களின் ஜனநாயக உரிமை களை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப் பிட்டுள்ளார். (4-6)

# சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும் திட்டம் ஐ.தே. கவிற்கு இல்லை

## ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

பிரதான தேர்தல்களை ஒத்தி வைப்பதற்காகச் சர்வஜன வாக் கெடுப்பை நடத்தும் எவ்வித திட்டமும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது என்று அதன் தேசிய செயலாளரான முன்னாள் அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத் தில் நடத்தப்படும் எனவும், சுயாதீன பொது வேட்பாளராக ரணில் விக்கிர மசிங்க களமிறங்குவார் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனைத்து கட்சிகளினதும் ஆதரவு உள்ளது. நாட்டை மீட்கக் கூடிய அனு பவமும் அவருக்குத் தான் உள்ளது. ரணிலின் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை நாட்டு மக்களும் உணர்ந்துள்ளனர்.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்து வதற்கு எவ்வித திட்டமும் இல்லை. அது தொடர்பில் தனிப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் தேர்தல் நடத் தப்பட வேண்டும் என்பதே அனைத்து கட்சிகளினதும் நிலைப்பாடாகும் என வும் தெரிவித்தார். (4-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 400 | 400-500 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 200 | 190 | 220 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 200 | 200 |
| தக்காளி | 500 | 500 | 450 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 150 | 150 | 120-150 | 200 |
| கோவா | 350 | 260 | 300 | 250 | 300 |
| கரட் | 350 | 380 | 450 | 300 | 450 |
| பூசணி | 140 | 140 | 120 | 120 | 160 |
| புடோல் | 300 | 300 | 200 | 150 | 320 |
| வாழைக்காய் | 180 | 140 | 150 | 100-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 200-450 | 300-500 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 240 | 250 |
| பாகற்காய் | 800 | 1000 | 1200 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 160 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 550 | 480 | 400 | 500-700 | 500 |
| லீக்ஸ் | 650 | 650 | 650 | 350 | 650 |
| பீற்றூட் | 550 | 550 | 600 | 300 | 600 |
| கறிமிளகாய் | 600 | 500 | 550 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 1000 | 600 | 600 | 200-350 | 600 |
| போஞ்சி | 800 | 700 | 750 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 350 | -- | -- | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 80-100 | 100-130 | 150 |
| தேசிக்காய் | 1000 | 800 | 1200 | 900-1100 | 1300 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 60-100 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 700 |
| முள்ளங்கி | 200 | 200 | -- | 90 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 100 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | -- | 90 | [illegible] |

# இன்று ஒரு தகவல் 151



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மருத்துவரைச் சந்திக்கும் போது

சட்டத்தரணிகளிடமும் வைத்தியர்களிடமும் பொய் சொல்லக் கூடாது என்று சொல்வது உண்டு. சட்டத்தரணிகளிடம் பொய் சொன்னால் வழக்கு வீக்காகி விடும்! வைத்தியர்களிடம் பொய் சொன்னால் உடம்பு வீக்காகி விடும்!

ஒருவர் பொய் சொல்லுவதில் கில்லாடி ஆக இருக்கலாம். இருந்தாலும் அவர் உடலில் ஒரு கோளாறு வந்து வைத்தியரிடம் காட்டுவது போல் ஆகிவிட்டால் அவ ரும் உண்மையை தான் பேசி ஆக வேண்டும். இல்லை என்றால் அது அவர் உடம்பிற்குத் தான் இடைஞ்சல். ஒரு பெரிய திருடன். திருடுவது, பொய் சொல்வது இது இரண்டும் தான் அவனுக்கு கை வந்த கலை. அவனுக்கு வயிற்றுவலி வந்து விட்டது. உடனே வைத்தியரிடம் வந்தான். வயிறு வலிக்கிறது டாக்டர் என்றான். உனக்கு குடிக்கிற பழக்கம் உண்டா? என்று கேட்டார் வைத்தியர். அது எல்லாம் இல்லை டாக்டர் என்று பொய் சொன்னான்.ஆனால் வைத்தியர் உண்மையைக் கண்டுபிடித்து விட்டார். அதன் பின்பு அவனுக்கு ஆலோசனை வழங்கினார்.

"இதோ பாருப்பா... உன்னுடைய 'தொழில் தர்மப்' படி பொலிஸிடம் பொய் சொல்லி தப்பிக்க நினைக்கலாம். ஆனால் வைத்தியரிடம் பொய் சொன்னால் உனக்குத் தான் இடைஞ்சல் என்றார்.

ஆனால் ஒரு விடயம் பொலிஸாரிடம் பொய் சொன்னாலும் உடம்பு தாங்காது! வைத்தியரிடம் பொய் சொன்னாலும் உடம்பு தாங்காது! ஒரு டாக்டரிடம் ஒரு நோயாளி போகும் போது எப்படி போக வேண்டும்? என்பதை பற்றி அந்த திருடனுக்கும் அங்கே இருந்த மற்றவர்களுக்கும் அறிவுரையை வழங்க ஆரம்பித்தார் அந்த டாக்டர். முதற் தடவையாக டாக்டரிடம் போகும் போது உங்கள் பெயர், விலாசம் இதையெல்லாம் தெளிவாக சொல்லி விட வேண்டும். விருந்தாளியை கடைத்தெருவிலே பார்த்தால் கொடுப்பது போல் பொய்யான விலாசம் கொடுக்கக் கூடாது. உதாரணமாக உங்களுக்கு வயிற்றுவலி வருகிறது. ஒரு டாக்டரிடம் போகின்றீர்கள். அப்போது அவரிடம் முதல் பார்த்த டாக்டர், சாப்பிட்ட மருந்தின் விபரம் இதையெல்லாம் மறைக்காமல் சொல்ல வேண்டும். அப்போது தான் மேற்கொண்டு வைத்தியம் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

பழைய மருந்துச்சீட்டு, மருத்துவப் பதிவுகள் ஏதாவது இருந்தால் மறக்காமல் எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். ஆறு மாதத்திற்கு முன் எடுத்த எக்ஸ்ரே தானே, அது இப்போது எதற்கு என்று நீங்கள் நினைக்கலாம். வியாதியினுடைய ஆரம்ப நிலையை தெரிந்து கொள்ள அது உதவியாக இருக்கும்.

குடிப்பழக்கம், புகையிலை போடுவது, போதை மருந்து இது போன்ற பழக்கம் இருந்தால் மறைக்காமல் சொல்ல வேண்டும். டாக்டர் என்ன உங்கள் மீது கேஸா போடப்போறார்? டாக்டரிடம் நீங்கள் தான் கேஸாக போய்ச் சேர்ந்து இருக்கிறீர்கள். அதிகமாக தேநீர் குடிக்கும் பழக்கம் இருந்தால் அதையும் சொல்ல வேண்டும்.

டாக்டர் மருந்துச்சீட்டில் என்ன எழுதிக் கொடுக்கிறாரோ அதை அப்படியே வாங்க வேண்டும். மருந்து கடைக்காரரிடம் சீட்டைக் கொடுத்து விட்டு "அந்த முதல் மாத்திரையில் ஆறு குறைத்துக் கொள்ளுங்கள், இரண்டாவது மாத்திரையிலே எட்டு கூட்டிக் கொள்ளுங்கள்" என்று எல்லாம் உங்கள் விருப்பத்திற்கு சொல்லக்கூடாது. கொஞ்சம் மருந்து சாப்பிட்டதும் உடம்பு சரியானது போல் தெரியும். உடனே சிலர் மருந்து சாப்பிடுவதை நிறுத்தி விடுவார்கள். அது மிகவும் தவறு. நோயை எதிர்த்து போராடுகின்ற கலத்தினுடைய வளர்ச்சி இதனால் பாதிக்கப்படும். அதனால் டாக்டர் எதுவரைக்கும் சாப்பிடச் சொல்கிறாரோ அது வரைக்கும் சாப்பிட்டுத் தான் மருந்தை நிறுத்த வேண்டும்.

சில சமயம் மருந்துக் கடைக்காரருக்கு டாக்டருடைய கையெழுத்து புரியாமல் போகலாம். அதனால் மருந்து மாறிப் போய் விடும். கடையில் மருந்தை வாங்கிய பின் டாக்டரிடம் காட்டி சரி பார்த்துக் கொண்டால் அது மிகவும் நல்லது. சில சமயம் டாக்டரே நீங்கள் மருந்து சாப்பிடுவதை பாதியிலே நிறுத்தச் சொல்லலாம். உடனே நிறுத்த வேண்டும். மிச்சம் மீதி மாத்திரைகள் இருந்தால் அதை வீட்டிலே வைக்காதீர்கள். குழந்தைகளின் கண்ணில் பட்டால் மிட்டாய் என்று நினைத்து எடுத்து வாயிலே போட்டுக்கொள்வார்கள். பின் அதற்கு என்று ஒரு டாக்டரை தேட வேண்டியிருக்கும். உங்கள் இரத்த வகை என்ன என்று உங்களுக்கு தெரிய வேண்டும். அதை நீங்களே டாக்டரிடம் கூற முடிந்தால் மிகவும் நல்லது. இவ்வளவு ஆலோசனைகளையும் அந்த டாக்டர் கொடுத்தார். அந்தத் திருடனும் மற்றவர்களும் அக்கறையாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர் மறுபடியும் அந்தத் திருடனைப் பார்த்து, "இப்போது உன் மனதில் உள்ளதை மறைக்காமல் சொல். அது தான் உனக்கு நல்லது என்னிடம் சொல்வதற்கு நீ தயங்க வேண்டிய அவசியமில்லை உண்மையைப் பேசு" என்றார். அந்தத் திருடன் தயங்கிக் கொண்டு "டாக்டர்! உங்களுடைய ஃபீஸை கூடுமானவரைக்கும் குறைத்துப் போடுங்கள் அது தான் உங்களுக்கு நல்லது" என்றான். டாக்டர் திகைத்துப் போய் "ஏன் அப்படி சொல்கிறாய்?" என்றார். இவன் மெதுவாக, "ஏன் என்றால் நீங்கள் சொல்லுகின்ற ஃபீஸை இன்று இரவு உங்கள் வீட்டில் தான் நான் எடுக்க வேண்டும்" என்றான்.

டாக்டரிடம் பொய் சொல்லக்கூடாது தான் அதற்காக இப்படியா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவரசங்குளத்தில் காணி அளவீடு மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்

**(குருமன்காடு)**

**வவுனியா கதிர்வேலர் பூவரசங் குளத் தில் வனவள திணைக் களத்தி னரால் காணிகள் எல்லையிட்டு அளவீடு செய்வதற்காக வருகை தந்த வேளை அங்கு இருந்த பொதுமக்கள் எதிர்ப்பை தெரி வித்ததையடுத்து திரும்பிச் சென்றுள்ளனர்.**



1997 ஆம் ஆண்டு கதிர் வேலர் பூவரசங் குளத்திலிருந்து யுத்தம் கார ணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் 2011 ஆம் ஆண்டு குறித்த பகுதியில் மீள் குடி யேறியிருந்தனர்.

குறித்த பிரதேசம் அனைத் தும் பற்றை காடுகள் நிறைந்த தாக காணப்பட்ட நிலையில் அவர்கள் குறித்த பகுதியை துப் புரவு செய்து விவசாய நட வடிக் கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பகு தியில் வனவளத் திணைக் களத்திற்குரிய காணிகள் இருப்பதாக தெரி வித்து வன வளதிணைக் களத்தினர் அளவீட் டுப் பணிகளை மேற் கொள்ள நேற்று முன்தினம் குறித்த கிராமத்துக்கு வருகை தந் திருந்தனர்.

பொதுமக்களுடைய வயல் நிலங்கள் மற்றும் தோட்டம் செய்கின்ற பகுதிகளையும் வன வளத்திற்கு உரியதாக அடை யாளப்படுத்தி இருந் தமை யி னால் அவர்களை குறித்த பகுதி யில் அளவீடு செய்ய விடாது பொது மக்கள் முரண்பட்டுக் கொண்டனர்.

தமது கிராம சேவையாளரை அழைத்து வருமாறும் அதன் பின்னரே அளவீட்டுப் பணியை மேற்கொள்ள அனுமதிப்போம் என்றும் தாம் விவசாயம் செய் யும் பகுதியை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது எனவும் அவர்கள் இதன் போது தெரி வித்திருந்ததையடுத்து வனவள திணைக்களத்தினர் கிராம சேவையாளரையும் அழைத்து வருவதாக தெரிவித்து குறித்த பகுதியிலிருந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-250)

சட்டவிரோத செயற்பாடு

# கொக்காவில் பகுதியில் கண்காணிப்பு தீவிரம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கொக்கா வில் வழியாக அகழ்வுப் பொருட்கள், மரங்கள் கொண்டு செல்வதற்கு தடை என துணுக்காய் பிர தேச செய லகத்தின் ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத் தில் தீர்மானம் எடுக்கப்பட டுள்ளது.

ஐயன்குளம், புத்து வெட் டுவான், பழைய முறி கண்டி ஆகிய கிராமங்களில் இருந்து தொடர்ச்சியாக மணல், கிர வல், மரங்கள் கொக்காவில் வழியாக வெளி இடங்களுக்கு கொண்டு செல் லப்படும் நிலையில் பொது அமைப் புகள் பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத் தில் தெரிவித்த விடயங்க ளின் அடிப்படையில் இத் தீர் மானம் நேற்று முன் தினம் இடம் பெற்ற கூட் டத்தில் எடுக்கப் பட்டுள்ளது.

(4-6-350)

# காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு

## மன்னாரில் கடும் எதிர்ப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனின் நெறிப்படுத் தலில் அபிவிருத்தி குழுவின் தலைவரான இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் நேற்றுகூட்டம் இடம் பெற்றது.

குறிப்பாக மன்னார் தீவு பகு தியில் 2ஆவது கட்டமாக முன் னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்து கலந் துரையாடபட்ட போது மன் னார் மாவட்ட பிரஜைகள் குழு மீனவ அமைப்புகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஒன் றியம் ஆகியவை எதிர்ப்பை தெரிவித்தனர். மேலும் பல் வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன் கூட்டத்தில் தமிழ்பாராளுமன்ற உறுப்பி னர்கள் திணைக்களத் தலைவர்கள் முப்படையி னர், பிரதேச செயலாளர் கள், வட மாகாண திணைக் கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-285)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3142

### மதுஷன்




### சுபா




### டஜியின்




### தினேஷ்




### சாம்பவி




### பிறேம்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 506





அவ்வளவு பயங்கரமான நஷ்டம் இத்தமிழகத்துக்கு ஏற்பட்டிருக்கும் என்று என்னாலும் நம்ப முடியவில்லை. சுழற்காற்று உக்கிர நிலையை அடைந்திருந்தபோது அவர் என் கப்பலிலிருந்து கடலில் குதித்தார் என்று தான் சொன்னேன். கடவுள் அருளால் ஒருவேளை பிழைத்திருக்கலாம். இந்தக் கடற்கரையிலே வந்து ஒதுங்கியிருக்கலாம். அந்த ஆசையுடனே பார்ப்பதற்கு இங்கே வந்தேன்.

"சுழற்காற்று அடித்த போது கடலில் குதித்தாரா! எதற்காக? ஏன் குதித்தார்? உன்னுடைய கப்பலில் அவர் ஏன் ஏறினார்? அவர் குதித்தபோது, நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று பழுவூர் அரசர் படபடப்புடன் கேட்டார்.

நந்தினி குறுக்கிட்டு, "ஐயா! இவர் இலங்கைக்கு எதற்குப் போனார் என்பதிலிருந்து விவரமாகச் சொல்லட்டும்!" என்றாள்.

"ஆமாம்! உள்ளது உள்ளபடியே சொல்லு! உண்மையைச் சொல்லாவிட்டால் நீ உயிருடன் தப்பமுடியாது! உன்னை" என்று பழுவேட்டரையர் பற்களை நற நற வென்று கடித்தார்.

"அரசே! உண்மையைத் தவிர வேறு எதுவும் சொல்லி எனக்குப் பழக்கம் இல்லை. நான் பொய் சொல்ல நினைத்தாலும் என் நாக்குச் சொல்லாது. கேளுங்கள்! தாங்களும், கடம்பூர் சம்புவரையரும், மற்றும் பலரும் சோழ குலத்துக்கு விரோதமாகச் சதி செய்கிறீர்கள் என்று காஞ்சி நகருக்குச் செய்தி எட்டியது."

"பொய்! பொய்! முற்றிலும் பொய்!"

"செய்தி பொய்யாக இருக்கட்டும்! அதுவே நான் வேண்டுவது. காஞ்சிக்கு எட்டிய செய்தியையே நான் கூறினேன். அதன் பேரில் திருக்கோவலூர் மலையமானும், ஆதித்த கரிகாலரும் என்னை ஈழத்துக்கு அனுப்பினார்கள். அருள்மொழிவர்மரைக் கையோடு அழைத்து வரும்படி அனுப்பினார்கள்."

இவ்வாறு ஆரம்பித்துப் பார்த்திபேந்திரன், தான் இலங்கை சேர்ந்தது முதல் நடந்ததையெல்லாம், தான் அறிந்த வரையில் விவரமாகக் கூறினான்.

கதை முடிந்ததும் பழுவேட்டரையர், "கடவுளே! சோழ நாட்டுக்குப் பெருங்கேடு வந்துவிட்டது! இந்தப் பாவியினால் தான் வந்தது! இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி நான் அல்லவோ கட்டளை போட்டேன்? நான் அல்லவோ மரக்கலங்களை அனுப்பினேன்?" என்று கதறினார்.

"அரசே! தங்கள் குற்றம் ஒன்றும் இல்லை. தாங்கள் கட்டளை பிறப்பித்திராவிட்டாலும், இந்த மனிதருடைய கப்பலில் இளவரசர் ஏறிக் காஞ்சிக்குப் பயணமாகியிருப்பார் அல்லவா? வீணாக நொந்து கொள்ள வேண்டாம். நம்முடைய செயல்களுக்கு மேலே விதியின் செயல் ஒன்று இருக்கிறது. மேலும்" நந்தினி இவ்விடத்தில் உரத்துப் பேசுவதைச் சட்டென்று நிறுத்திப் பழுவேட்டரையரின் காதோடு ஏதோ சொன்னாள்: பழுவேட்டரையரின் முகம் சிறிது மலர்ச்சி அடைந்தது.

"ஆமாம் ஆமாம்! அது எனக்குத் தோன்றாமல் போயிற்று!" என்றார்.

பிறகு பார்த்திபேந்திரனைப் பார்த்து, "பல்லவா! உன் கப்பலுக்குப் போய் நான் பரிசோதித்துவிட்டு வரப்போகிறேன். அது வரை நீ இங்கேயே இருக்க வேண்டும்! தப்பிச் செல்ல முயலவேண்டாம். ஓட முயற்சி செய்தால் உடனே வேல் எறிந்து கொல்லும்படி என் வீரர்களுக்குக் கட்டளையிட்டுவிட்டுப் போகப்போகிறேன். ஜாக்கிரதை! முதுகிலே காயத்துடன் சாகாதே! உன் பரம்பரை, வீரபரம்பரை!" என்றார்.

"வந்தனம், ஐயா! தப்பித்து ஓடும் எண்ணமே எனக்குக் கிடையாது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கஞ்சப்பிரபு

(நேற்றைய தொடர்ச்சி)

பழையபடி அந்த இரும்பை நெருப்பில் போட்டு எடுத்து அவரும் உதவியாளும் அடித்தார்கள். அந்த இரும்பு மெல்லியதாக ஆகிவிட்டது. அதைப் பார்த்த அவர், "நீ கொண்டு வந்த இரும்பு மிக மோசம். அதில் ஒரு ஊசி தான் செய்ய முடியும். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

நடந்ததை எல்லாம் பார்த்து வெறுப்படைந்த உழவன், "எதையாவது செய்து தாருங்கள்," என்றான்.

அந்த இரும்புத் துண்டை சுத்தியலால் தட்டி ஊசி போல ஆக்கினார் ஜம்பு. மகிழ்ச்சியுடன் அதைக் கையில் எடுத்த அவர், "இந்த ஊசி சாதாரண ஊசி அல்ல. அருமையான ஊசி. நீண்ட காலம் உழைக்கும் ஊசி. இதைப் போன்ற அழகான ஊசியை இது வரை யாரும் உருவாக்கி இருக்க முடியாது," என்று அதை உழவனிடம் தந்தார்.



"நான் இதற்காக அதிக் கூலி கேட்கமாட்டேன். நான் உழைத்த உழைப்பு உனக்கே தெரியும். ஐந்து வெள்ளிப் பணம் கொடு. அது போதும்," என்றார்.

"ஒரு காசுகூடப் பெறாத ஊசி இது. பெரிய இரும்புத் துண்டை வீணாக்கியதோடு ஐந்து வெள்ளிப் பணமா கேட்கிறாய்? அந்தப் பணத்திற்கு பத்துப் புதிய கலப்பைகளையே வாங்க முடியுமே. என்னை ஏமாற்றவா நினைக்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்," என்று உள்ளத்திற்குள் கருவினான் அவன்.

"இப்பொழுது என்னிடம் வெள்ளிப் பணம் ஏதும் இல்லை. என் வீட்டில் ஏராளமாக நெல் உள்ளது. அங்கு வாருங்கள். பத்து வெள்ளிப் பணத்திற்கு உரிய நெல்லைத் தருகிறேன்," என்றான் அவன்.

மகிழ்ச்சி அடைந்த அவர், "நீ முன்னால் செல். நான் வண்டியுடன் பின்னால் வருகிறேன்," என்றார்.

உலைக்களத்தைப் பூட்டிவிட்டு வண்டியில் அமர்ந்தார் அவர். வண்டியோட்டி வண்டியை உழவனின் வீட்டின் முன் நிறுத்தினான்.

வண்டியோட்டியைப் பார்த்து, "நான் இந்தக் காலி சாக்கு மூட்டைகளுடன் உள்ளே செல்கிறேன். நீ இங்கிருந்தபடியே உள்ளிருந்து வரும் பேச்சுக் குரலைக் கவனி.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிந்திக்காதவன் முட்டாள்; சிந்திக்கத் துணியாதவன் கோழை; சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன். – டிரம்மண்ட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நம்புவது நம் தலைவிதி ஏமாற்றுவது அவர்களின் சதி

நம் யாழ்ப்பாணம் தீவகத்துக்கு குளிர்காலப் பறவைகள் வருவது வழக்கம். வெளிநாடுகளைச் சேர்ந்த இப்பறவைகள் மாரி காலங்களில் தீவகப் பகுதிக்கு வந்து சேரும்.

இவ்வாறு வருகின்ற பறவைகளின் பயணக்காலம், அந்தப் பறவைகள் தொடர்ச்சியாக எவ்வளவு நேரம் ஓய்வின்றிப் பறந்துள்ளன என்பனவெல்லாம் சுவாரஷ்யமான ஆய்வுகள்.

இதைக்கூறும்போது எங்கள் மண்ணைத் தேடி வருகின்ற அந்தக் குளிர்காலப் பறவைகளைப் பாதுகாத்து அவற்றை அவற்றின் நாடுகளுக்குத் திரும்பவும் அனுப்பி வைப்பது நம் கடமை.

தவிர, குளிர்காலத்துக்காகப் புலம்பெயர்ந்து இங்கு வந்த அப்பறவைகள், எங்கள் மண்ணில் கூடு கட்டி குஞ்சு பொரித்து எங்கள் யாழ்ப்பாணத்தையும் தங்களின் தாயகமாக்கிக் கொள்கின்ற நடைமுறையும் உண்டு.

ஆகையால் அந்தப் பறவைகள் எங்கள் தாயகத்துப் பறவைகள் எனக்கருதி அவற்றைப் பாதுகாப்பதும் அவசியம். இதனை நம் மாணவர்களுக்கு பாடநூல்களுக்கு அப்பால் சொல்லி வைப்பது கட்டாயமானது.

இவையொருபுறமிருக்க, இப்போது தேர்தல் காலம். அதனால் தென்பகுதி தேர்தல் பறவைகள் நம் தமிழர் தாயகம் நோக்கி வருகின்றன.

இங்கு வந்த பறவைகள் எத்தன்மையவை என்பது நமக்கு இப்போது புரியாது.

ஏனெனில் தேர்தல் காலப் பறவைகள் ஒருபோதும் தம் சுயரூபத்தை காட்டுவதில்லை.

மாறாக, பறவைகள் எல்லாவற்றிலும் பக்குவப்பட்ட பறவைகள் போல அவை காட்டிக் கொள்ளும்.

தவிர, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முட்டையிடுவோம். அடை காப்போம். குஞ்சு பொரிப்போம். ஒன்றை ஒன்று கொத்தி அறியோம். ஒரு தாய் பிள்ளைகள் போல ஒன்றாய்ப் பறப்போம். இரை தேடுவோம். பசி ஆறுவோம் என்றெல்லாம் பல கதைகள் பேசும்.

இதில் சில பறவைகள் மௌனம் காத்து தென்பகுதியிலும் தங்களுக்கு இரை தேடும். இத்தகைய பறவைகள், ஏனைய தேர்தல் பறவைகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்யும்.

தென்பகுதி மக்களே! சில பறவைகள் தமிழர் தேசத்தில் இரைதேடி நிற்கின்றன.

நீங்கள் அந்தப் பறவைகளுக்கு இரை கொடுத்தால், அவை தமிழர்களுக்கு நாடு கொடுத்துவிடும். ஆகையால் கவனம் கவனம் என்று கத்திச் செல்லும்.

எங்களுக்கு இதமாய், வசமாய் கதைத்த பறவைகளை ஆதரித்தால் என்ன? என்று நம் ஏழை மனம் நினைக்கும்.

அதில் இருந்து விலக முடியாத பலன் நம்முடையது.

நம்புவோம். நம்பி வாக்களிப்போம். அவ்வளவுதான். வந்த பறவைகள் அத்தனையும் செத்தார் உடலைத் தின்று புசிக்கும் கழுகார் இனத்தின் கடந்த காலப் பரம்பரை என்பது தெரியவரும்.

இருந்தும் என் செய்வது அந்தப் பறவைகளை நம்புவதுதானே நம் தலைவிதியாயிற்று.

ஆம், எங்கள் தலைவிதி அவர்களை நம்புவது. எங்களை ஏமாற்றுவதுதான் அவர்களின் சதிவலை. என் செய்ய முடியும்.

### பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் போரில் உயிரிழந்தும்

# நீங்கள் எல்லோரும் இணைந்து இன்னமும் இனப் பிரச்சினையைத் தீர்க்காதது ஏன்?

## அநுரகுமாரவிடம் சைவசமயத் தலைவர்கள் கேள்வி

(யாழ்ப்பாணம்)

போரில் எந்த குற்றமும் செய்யாத பாடசாலை சிறுவர்கள், குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என பல்லாயிரக் கணக்கானவர்கள் குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்து, இவ்வளவு ஆண்டுகளாகியும் நீங்கள் எல்லோரும் இணைந்து இன்னமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்க முடியவில்லையே என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்கவிடம் சைவ சமயத் தலைவர்கள் ஆதங்கத்தை வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்குச் சென்று சந்திப்பில் ஈடுபட்டனர்.

சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, நாட்டில் நீண்டகாலமாக நிலவும் இனப் பிரச்சினையை தீர்க்க ஜே.வி.பி. பங்காற்ற வேண்டும் என வலியுறுத்திய சைவ சமயத் தலைவர்கள், போரில் எந்த குற்றமும் செய்யாத பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், குழந்தைகள் குண்டு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தபோது இடதுசாரித் தலைவர்களாக இருந்த நீங்கள் ஏன் எதிர்ப்பை வெளியிடவில்லை என கேள்வி எழுப்பினார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம் நீடித்து செல்லும் நிலையில் அதற்கு தீர்வு என்ன எனச் சமயத் தலைவர்கள் கேட்ட போது எனது சகோதரியும் காணாமலாக்கப்பட்டவர்தான். எனக்கு அதன் வலி தெரியும். நாம் ஆட்சிக்கு வந்து அதற்கொரு தீர்வை காண்போம் என அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வெடுக்குநாறிமலை உள்ளிட்ட பல இடங்களில் சைவ ஆலயங்கள் அழிக்கப்படும் நிலையில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகிறன்றன. தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணாமல் இந்த நாடு ஒருபோதும் முன்னேறாது என சைவ சமயத் தலைவர்கள் சுட்டிக்காட்டியபோது, நாம் ஆட்சிக்கு வந்தால் கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் உள்ள அழிவடைந்த ஆலயங்கள் மீள புனரமைக்க நடவடிக்கை எடுப்போம் என அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். (ந-7,10)

## நிதி மோசடி வழக்கிலிருந்து ரஞ்சன் ராமநாயக்க விடுதலை

### கண்டி நீதவான் உத்தரவு

(கண்டி)

நிதிமோசடி தொடர்பில் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் கண்டியை சேர்ந்த பெண் ஒருவரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குற்றவியல் வழக்கின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையில் தவறு இருப்பதாக நீதிமன்றம் கண்டறிந்துள்ளது.

இதனையடுத்து முறைப்பாட்டாளரான பெண் வழங்கிய வாக்கு மூலம் ஊடாக இதுவொரு குற்றவியல் வழக்கு இல்லையெனவும் குடியியல் வழக்கு என தெரியவருவதாகவும் நீதிமன்றம் கூறியுள்ளது.

இதற்கமைய, ரஞ்சன் ராமநாயக்கவை இந்த வழக்கிலிருந்து விடுவித்து கண்டி நீதவான் சாமர விக்ரமநாயக்க நேற்று உத்தரவிட்டார். (ந-7,10)

## மின்சாரம் தாக்கி மாணவி மரணம்

மின்சாரம் தாக்கி 17 வயது பாடசாலை மாணவி உயிரிழந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நுகேகொட மஹாமாயா பெண்கள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நிஷானி பியுமிகா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

வீட்டில் செயல்படாத நிலையில் இருந்த தையல் இயந்திரத்தை இயக்க முயற்சி செய்த போது மாணவி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த நிஷானி பியுமிகாவின் தந்தை கடந்த 2023 ஆம் ஆண்டு மலேசியாவில் ஹோட்டல் ஒன்றில் பணிபுரிந்து வந்த நிலையில் உயிரிழந்திருந்தார்.

பிரஸ்தாப மாணவியின் தாய் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சவுதி அரேபியாவிற்கு வேலைக்காக சென்ற நிலையில் பாட்டியுடன் மாணவி வசித்து வந்துள்ளதாகவும் பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,10)

## ஒளிபாய்ச்சி மீன்பிடித்த 16 மீனவர்கள் கைது

(வெற்றிலைக்கேணி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேர் 8 படகுகளுடன் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கட்டைக்காட்டில் இருந்து நேற்று முன்தினம் ஐம்பதுக்கும் அதிகமான படகுகளில் சென்று ஒளி [illegible]க்கு வந்து கொண்டிருந்த வேளை நேற்று காலை 8 படகுகளுடன் குறித்த 16 பேரும் வெற்றிலைக்கேணி கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்தொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்[illegible] (ந-7,10)

## ஏப்ரல் 21 தாக்குதல் விசாரணைக் குழு நியமனம்

(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக ஓய்வுபெற்ற நீதிபதி அல்விஸ் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் முதலில் கிடைத்த புலனாய்வுத் தகவல் குறித்து அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் பற்றி குழுவினூடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனிடையே, இந்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மட்டக்களப்பு - வவுணதீவில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுடன் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு தொடர்புபட்டுள்ளமை தொடர்பில் இராணுவ புலனாய்வு பணிப்பாளர் சபையின் வெளிக்கொணர்வு குறித்தும் இந்த குழுவினால் விசாரணை செய்யப்படவுள்ளன.

இவை தொடர்பான விசாரணை அறிக்கையை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி தம்மிடம் கையளிக்குமாறு ஜனாதிபதியினால் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி – பகுதி V

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

13

இவ்விதமாக மலைநாட்டின் பல நகரங்களில் கமக்காரர் செய்த ஆர்ப்பாட்டங்களை ஓர் அபாயம் நிறைந்த கலவரமெனக் கூறமுடியாது. அவர்கள் நாட்டில் அழிவை உண்டு பண்ணியிருக்கலாமென்பது உண்மையே எனினும், திட்டமும் ஒழுங்கும், உண்மையான தலைவர்களுமில்லாத இக்கலகக்காரர், பிரித்தானிய அரசாங்கத்துக்கு எவ்வித பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தியிருக்க முடியாது.

ஆனால் நீண்ட காலமாக மலைநாட்டில் கலகத்துக்கு அஞ்சிய அரசாங்கம் வெகுண்டு கடும் நடவடிக்கைகளில் இறங்கிற்று. விசேடமாக ஆள்பதி றொறிங்ரன், மதியிழுந்தவனைப் போன்று தீவிர நடவடிக்கைகளில் இறங்கினார்.

கப்பித்தான் உவாட்சனின் கீழ் ஓர் இராணுவப்படை மாத்தளைக்கு அனுப்பப்பட்டபொழுது, அவர்கள் கலகக்காரர் கூட்ட மொன்றினை வாரியப்பொலையில் சந்தித்தனர். உவாட்சன் எக்காரணமுமின்றி அவர்கள்மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கட்டளையிட்டான். ஓட்டம் பிடித்த கிராம வாசிகளை இராணுவத்தினர் ஈக்கள் போலச் சுட்டு வீழ்த்தினர்கள்.

வாரியப்பொலைப் போரில் வெற்றிவாகை சூடிய இராணுவப்படை, மாத்தளையை அடைந்தது. அங்கும் அவர்கள் 200இற்கு மேற்பட்ட கமக்காரரைத் தம் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கினர்.

அதற்குப்பின்பு படைகளும் படைத்தலைவர்களும் கொள்ளையடிப்பதிலும், வீடுகளுக்கு எரியூட்டுவதிலும், மக்களைக் கொலை செய்வதிலும், திரவியங்களையும், பொருள்களையும் திரட்டுவதிலும் ஈடுபட்டனர்.

இவ்விதமாகக் கண்டி, மாத்தளை, தம்புளை, குருநாகல் என்னுமிடங்களில் ஏற்பட்ட கலகங்கள் முடிவடைந்தன. இந் நடவடிக்கைகளில் ஒரு ஆங்கிலப் போர் வீரனாவது உயிர் நீத்ததில்லை. எனினும் கண்டி நாட்டில் இராணுவ ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டு, பயங்கர ஆட்சியும் இரத்தக் களரியும் தொடங்கிற்று.

இராணுவத்தினர், கிராமங்களின்மேற்படையெடுத்து, மக்களைச் சித்திரவதைசெய்து அவர்களது பணத்தையும் நகைகளையும் பறித்தனர் ஆடு மாடுகள், நெல், தானியங்கள், பிறபொருள்களை அபகரித்து, விற்றுப் பணம் சம்பாதித்தனர். வீடுகளும், சில இடங்களில் முழுக்கிராமங்களும் தீயினாற் சாம்பலாயின.

கண்டியில் இராணுவ நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, 200 கலகக்காரர் தூக்கிலிடப்பட்டனர் அல்லது துப்பாக்கிக் குண்டுகளினால் உயிர் நீத்தனர். நூற்றுக்கணக்கானோர் மேல் சிறைத் தண்டனையும் கசையடியும் கட்டளையிடப்பட்டது.

றொறிங்ரன் இரத்தம் சிந்துவதில் ஈடுபட்டு நின்ற வேளையில், பல ஆங்கிலேயர், நீதியும் நியாயமும் கண்டி மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென நடவடிக்கையெடுத்தனர். பிரதம நீதியரசராயிருந்த சேர் அந்தணி ஒலிபான்ற் தனது உயர் பதவியின் இலட்சியங்களையும் சுதந்திரத்தையும் கைநெகிழவிட அறவே மறுத்தார்.

ஆள்பதியைப் போன்று வெகுளியடையாத அவர், உறுதியுடனும் அச்சமின்றியும் ஆள்பதியின் கடும் நடவடிக்கைகளைக் கண்டித்தார். முடிக்குரிய வழக்கறிஞர் திரு. செல்பி அவர்களும் பிரதம நீதியரசரைப் போன்று, கலகக்காரருக்குச் செய்யப்பட்ட அநீதிகளைக் கண்டித்தார்.

முதன் முறையாக ஐரோப்பியர், கண்டிய மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காகக் கவலைப்பட்டனர். "ஒப்சேவர்" பத்திரிகையின் ஆசிரியர்களான எலியட் பேர்குசன் இருவரும் ஆள்பதிக்கெதிராக மிகவும் வன்மையான கண்டனங்களை எழுதினர்.

அவர்களது குரல்ஒலியின் வன்மை, ஈற்றில் இங்கிலாந்தையும் போயடைந்தது. பிரித்தானியப் பாராளுமன்றம் நியமித்த விசாரணைக் குழு, முழுச்சம்பவத்தையும் தீர ஆராய்ந்து, றொறிங்ரனையும், சேர் ஜேம்ஸ் ரெனன்ரையும் திருப்பியழைக்குமாறு சிபாரிசு செய்தது.

### கண்டிக் கலகத்தின் பின் விவசாய, நீர்ப்பாசன முன்னேற்றம்

பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்பம் தொட்டு அரசாங்கம், நீர்ப்பாசனத் திட்டங்கள் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டது. ஆனால் இறை வருமானத்தின் குறைவே ஆள்பதிகளின் முயற்சிகளை மிகக் கட்டுப்படுத்தலாயிற்று.

உலர் வலயத்தின் சமவெளிகளில், பருவப் பெயர்ச்சிக்காற்று மழை இல்லாக் காலங்களில், நீர்ப்பாசன வசதிகள் மிகவும் தேவைப்பட்டன. நீர்ப்பாசன வேலைகள் அமைப்பதைத் தமது பிரதான கடமைகளில் ஒன்றாகக் கொண்ட சிங்கள அரசர்கள், விசாலமான குளங்களையும் கால்வாய்களையும் அமைத்திருந்தனர்.

மகாவலிக்கும் கண்டிப் பிரதேசத்துக்கும் வடக்கே, பண்டை நாட்களில் சிங்கள நாகரிகத்தின் தொட்டில் போன்று விளங்கிய இராசரட்டை, அநுராதபுரம், பொலநறுவை என்னும் பகுதிகள் அழிவுற்றுக்கிடந்தன. இப்பகுதி, பண்டைய நாட்களில் இலங்கையின் "மிகவும் உற்பத்தி வளம் கூடிய இடமாகவும், குடிசனம் அடர்த்தியாக இருந்த பகுதியாகவும் இருந்தமைக்கு, இவற்றின் நீர்ப்பாசன அமைப்புக்களே சான்று பகரும்.

பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்த போர்களினாலும் கவனிப்பின்மையினாலும் நகரங்கள் சிதைந்து, கிராமங்கள் பாழடைந்து, பயிர் செய்யப்பட்ட பிரதேசங்களெல்லாம் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பாகத்தில் காடடர்ந்த பிரதேசங்களாக உருமாறிவிட்டன. பிரமாண்டமான அழிவுச் சின்னங்களையும் பாரிய நீர்த்தேக்கங்களையும் கொண்ட இம்மாநிலம் முழுவதும், குடிசனமற்ற பெருங்காடாக மாறிவிட்டது.

கோல்புறுக் சீர்திருத்தங்களில் கமக்காரரின் நிலைமை பற்றிச் சிறிதளவேனும் அக்கறை காட்டப்படவில்லை. இதனால் அரசனின் ஆட்சி தோன்றிய நாள்முதல், உலர் வலயத்தில் வாழ்ந்த கமக்காரனின் சமூக, பொருளாதார நிலைகள் அதிகீழ்த்தரமான நிலையை எய்தின. 1848 ஆம் ஆண்டுக் கலகத்துக்கு கமக்காரரின் அதிருப்தியும் ஒரு முக்கியகாரணமாக அமைந்தது.

அக்கலகம், அதிகாரிகளின் கண்களைத் திறந்து, விவசாயிகளின் பரிதாப நிலையையும், அவர்களது நலன் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதையும் தெளிவாக எடுத்துக் காட்டிற்று. இதன் பயனாக 19 ஆம் நூற்றண்டின் பின் அரைப்பாதியில் அரசாங்கம் கமக்காரரின் நிலையைச் செம்மைப்படுத்துவதில் கூடுதலான அவதானமும் அக்கறையும் காட்டத் தொடங்கியது.

ஆள்பதிகள், கோப்பிச் செய்கையின் விருத்தியுடன் தனித்து நில்லாது, விவசாயிகளின் நலவுரிமைகளிலும் ஆர்வம் காட்டினர். விசேடமாக உவாட் (1855-1860), றொபின்சன் (1865-1872), கிறெகரி (1872-1877), கோடன் (1883-1890), றிட்ஜ்வே (1896-1903) எனும் ஆள்பதிகள், நேரத்தையும் செலவையும் பொருட்படுத்தாது, கமக்காரருக்குத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்ய முன் வந்தனர். அவர்களது ஆர்வத்துக்கு உறுதுணையாக, நாட்டின் பொருளாதாரம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வரலாயிற்று.

ஆள்பதி உவாட் பழைய குளங்களைத் திருத்துவதில் மிகுந்த சிரத்தையும் அக்கறையும் காட்டினர். கீழ் மாகாணத்தின் இரக்காமம் அம்பாறைக் குளங்களையும் தென்மாகாணத்தில் ஊறுபொக்க, கிராமக் குளங்களையும் புனருத்தாரணம் செய்வித்தார். மாத்தளை, பதுளை, மத்திய மாகாணம் என்னும் பகுதிகளில் சிறு குளங்கள் அரசாங்க முகவரின் மேற்பார்வையின் கீழ் விவசாயிகளினால் சம்பளமின்றித் திருத்தியமைக்கப்பட்டன. இப்புனரமைப்புத் திட்டங்களின் பயனாகவும் புதிதாக அமைக்கப் பட்ட தெருக்களின் பயனாகவும் காடடைந்து கிடந்த வயல்களெல் லாம் மீண்டும் நெல்லை உற்பத்தி செய்யத் தொடங்கின. உலர் வல யத்தின் சனச் செறிவு எண்ணிக் கையிலும் செல்வத்திலும் மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்கியது.

பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் றொபின்சனும் குளங்களைப் புதுப்பிக்கும் முயற்சியில் அதிக அக்கறையும் சிரத்தையும் காட்டினார். 1867 இல் அவர் "நீர்ப்பாசனத்தில் அல்லது உணவைக் கூடுதலாக உற்பத்தி செய்யக்கூடிய வேலைகளில் அரசாங்கப் பணத்தைச் செலவிடுவதற்கு வாய்ப்பான திட்டம்" ஒன்றினை வகுக்குமாறு ஒரு விசாரணைச் சபையினை நியமித்தார். மிகவும் விரிவான அறிக்கை ஒன்றினைத் தயாரித்த அச்சபை நீர்ப்பாசன முறையினை விருத்தி செய்வதன் மூலம் தான் விவசாய அபிவிருத்தி ஏற்படுமெனச் சிபார்சு செய்தது. இதன் பயனாக அரசாங்கம் சிறிய நீர்ப்பாசன வேலைகளைத் திருத்துவதற்கு பணம் உதவியது. அதனுடன் கிராம வாசிகளின் முயற்சிக்கும் கடன் கொடுத்து அப் பணத்தைப் பத்து வருடங்களில் திருப்பிப்பெற ஏற்பாடுகள் செய்தது.

உண்மையான நீர்ப்பாசன புனருத்தாரண வேலைகள் ஆள்பதி கிறெகரி காலத்திற்றான் ஆரம்பிக்கப்பட்டன. அவர் 1873 இல் நுவரக்கலாவிய, தமன்கடுவை எனும் மாவட்டங்களை இணைத்து வடமத்திய மாகாணமெனும் ஒரு புது மாகாணத்தை ஏற்படுத்தி, அதன் நிர்வாகப் பொறுப்பினை அதி திறமையும் உற்சாகமும் நிறைந்த அரசாங்க முகவர் ஜே. எவ். டிக்சன் அவர்களிடம் ஒப்படைத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர...

னுக்கான விஜயமொன்றை மேற் கொள்ளவுள்ளார்.

நாளை மறுதினம் 15ஆம் திகதி லண்டனில் நடைபெறும் கூட்டமொன் றில் உரையாற்றுவதற்காகவே அவர் அங்கு செல்கின்றார். புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களால் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பிரிட்டனின் முக்கிய சில அரசியல் பிரமுகர்களையும் இந்த விஜ யத்தின்போது அநுர குமார சந்தித்து கலந்துரையாடுவார் எனவும் எதிர் பார்க்கப் படுகின்றது. (ந-7,10)

## யுத்தம்...

திர்ஷ்டவசமான நிலை என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 233ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உப கரணங்கள் யாழ்ப்பாணம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை அபி விருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட் சம் ரூபாய் நிதியுதவியும் வழங்கி வைக் கப்பட்டது.

இங்கு கருத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித்,

“வடக்கு மாகாணத்தில் மக்களை மையப்படுத்திய பாரிய அபிவிருத்தி யொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கருதுகின்றது.

இது மக்களை முன்னிலைப்படுத் திய பங்கேற்பு அபிவிருத்தியின் ஒரு வடிவமாக அமைந்து காணப்படும். இதன்மூலம் கிராமத்தைக் கட்டி யெழுப்பி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்குப் பக்க பலம் கிடைக்கும்.

“இதற்கு, அறிவு சார்ந்த பொருளா தாரம், ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர வேண்டும். தகவல் தொழில்நுட் பக் கல்வியை மேம்படுத்த தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவைப் பாடு நாட்டில் இன்று எழுந்துள்ளது.

“யாழ். மாவட்டத்தில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் கைத்தொழில் பூங்காக் களை அமைத்து, அபிவிருத்தியை நடைமுறை ரீதியாக முன்னெடுப்போம். இதுவே ஐக்கிய மக்கள் சக்தியின் கனவாகும்” என்றார். (ந-7,10)

## 15 முக்கிய...

மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரி வித்தார்.

கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு நாடுக்குத் தேவையான அடிப்படை மாற்றங்களைச் செய்ய முடிந்துள்ளதாக ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

அரச துறையிலும், தனியார் துறை யிலும் இலஞ்சம், மோசடி, ஊழல், கொமிஸன் எடுத்தல் போன்றவற்றைத் தடுக்கும் வகையில் ஊழல் தடுப்புச் சட்டம் அரசாங்கத்தால் நிறைவேற்றப் பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் எதிர்ப்பு சாசனத்துடன் பொருந் தும் வகையில் இது தயாரிக்கப்பட் டுள்ளது. அதன்படி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அதிகாரங்களும் சுதந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான சட்டம் தற்போது முழுமை நிலையை எட்டியுள்ளது. எனவே, நாட்டின் அனைத்து பிரஜைகளும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப் புகள் தொடர்பான அறிக்கைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் சொத்து பொறுப்பு அறிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்கிறார்கள் என்றார். (ந-7,10)

## டிப்பர் மோதி...

பட்ட கைதடி நுணாவில் பகுதியில் நேற்றைய தினம் டிப்பர் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரி ழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளி நொச்சி நோக்கி ஏ9 வீதி ஊடாகப் பயணித்த டிப்பர் குறித்த வீதியால் நடந்து சென்ற நபரை மோதியதில் அவர் உயிரிழந்தார்.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 34 வயதான கළுபிரேமரத்ன என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

டிப்பர் சாரதி கைது செய்யப்பட் ருப்பதுடன், உயிரிழந்த நபருடைய சடலம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் விபத்துத் தொடர்பான மேல திக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (ந-7,10,30)

## இளம் மருத்து...

சாலையின் விடுதியில் தங்கியிருந்த வைத்தியர் ஒருவர் நேற்று புதன்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் திருநெல்வேலியைச் சேர்ந்த பிரே மானந்தராசா கிருஷ்ணானந்தா (வயது- 30) என்ற வைத்தியராவார்.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் பெண்ணியல் நோய் மருத்து வராக அவர் கடமை புரிந்து வருகின்ற நிலையில் உறவினர்கள் அவருக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்த போதும் அவருடன் தொடர்பை ஏற் படுத்த முடியவில்லை. இதனையடுத்து விடுதியைத் திறந்து பார்த்த போது அவர் கட்டிலில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற் கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடும் மன அழுத்தம் காரணமாக அதிகளவான மயக்க மருந்தை உடலில் செலுத்தியதால் மரணம் சம்பவித்ததாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கனகசபை வாசுதேவா மேற் கொண்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ந-7,10,60)

## அனலை...

இந்தியாவின் தமிழகத்தில் நேற்று கரை சேர்ந்துள்ளனர்.

அனலைதீவில் இருந்து கடந்த 10ஆம் திகதி மாலைகடற்றொழிலுக்கு புறப்பட்ட இரண்டு மீனவர்கள் கரை திரும்ப வில்லை என அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஜோன் பொஸ்கோவால் கடற்றொழில் திணைக்களம் மற்றும் கடற்படையினருக்குத் நேற்று முன்தினம் தகவல் வழங்கப்பட்டது.

35 மற்றும் 44 வயதுடைய இரண்டு மீனவர்களே இவ்வாறு காணாமல் போயிருந்த நிலையில் நேற்று மாலை நாகப்பட்டினத்தில் அவர்கள் கரை அடைந்துள்ளனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக படகு அலையில் அடித்துச் செல்லப் பட்டு தமிழகத்தின் நாகபட்டினம் கடற் கரையில் கரையொதுங்கியுள்ளது என்று தமிழகச் செய்திகள் தெரிவிக் கின்றன. (ந-7,10)

## தபால் ஊழியர்...

ஊழியர் பற்றாக்குறை காரணமாக தபால் திணைக்களத்தின் செயற்பாடு கள் முற்றாக தடைப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த தபால் சேவை தொழிற் சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார். (ந-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.06.12 — சீட்டிழுப்பு இலக்கம் 5502 — D 3 8 3 1 1 1
அத சம்பத — D 3 1 1 1 — சீட்டிழுப்பு இலக்கம் 77

தன நிதானய — திகதி - 2024.06.12 — சீட்டிழுப்பு இலக்கம் - 1532 — M 03 09 62 82 M — Double Chance 52269

மெகா பவர் — திகதி 12/06/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1850 — C 04 21 33 48 66 — 59987

லக்சி 7 VIP — திகதி 2024.06.12 — சீட்டிழுப்பு இலக்கம் 328 — G 1 1 1 9 7 0 G

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3744 — சீட்டிழுப்பு திகதி 12.06.2024 — Q 30 56 77 80 — Q 49921

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.06.12 — சீட்டிழுப்பு இலக்கம் 0811 — சிம்மம் 05 08 31 39 சிம்மம் — 37381 — 17

உத்தியோகபூர்வ முடிவுகள் — 12.06.2024 — வெற்றி வாரம் 210 — வர்ணம் பச்சை — A 7 1 6 3 8 7 — 50390 — L — அடுத்த சுப்பர் ஜக்பொட 23,849,364.00

SUPER BALL — 2476 — சிவப்பு — 12.06.2024 — புதன்கிழமை — 35 53 55 74 C — 10491 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,031,046.40

சனிதா — திகதி 2024.06.12 — வெற்றி வாரம் 4637 — 04 42 48 66 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,453,096.80 — 74769

சீட்டிழுப்பு வாரம் 4188 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.06.12 — தினம் புதன்கிழமை — 07 09 32 33 — கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,773,642.80 — 966505

C 03 12 18 23 42 — 1652 — 905770 — 12.06.2024 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 527,311,495.00

ஜயோதா Jayoda — திகதி 2024.06.12 — வெற்றி வாரம் 2033 — வர்ணம் மஞ்சள் — 29 40 46 56 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,867,679.20 — 89700

ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் : 2302 — சீட்டிழுப்பு திகதி : 2024.06.12 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.119,632,327.20 — 43 48 53 60 E — 326217


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0585)

076 825 7716 (ஆகாஸ்)


## சீனக்கடலட்டை...

ஏற்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஜெனிவாவில் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா நகரில் இடம்பெற்று வரும் தேசிய பொருளாதார மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர்,

சீனாவில் நவீன தொழிநுட்பம் வடக்கின் மீன்பிடித் தொழிலுடன் தொடர்புபட்டிருந்தாலும் எந்தவித தொழிநுட்ப வளர்ச்சியும் காணாத இலங்கையின் வடக்கு, கிழக்கு மீனவ மக்கள் இந்த வளர்ச்சியுடன் கூடிய தொழிநுட்பத்தின் முன்னால் போட்டியிடுவது பாரிய அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது என சுட்டிக்காட்டினார்.

விசேடமாக, பருத்தித்துறை மற்றும் மன்னார் போன்ற பிரதேசங்களில் நடத்தப்படும் சிறிய மீன் பண்ணைகள் தற்போது மூடவேண்டிய அபாயத்தில் உள்ளது.

மேலும், வடக்கு, கிழக்கில் காணப்படக்கூடிய கடற்பரப்பில் சிறிய மீன்கள் உருவாகக்கூடிய இடங்கள் விரைவில் அழிவடைந்து வருவதாக மீனவர்கள் தெரிவித்துவரும் நிலையில், இலங்கையின் வடக்கு கிழக்கில் மீனவ மக்கள் உட்பட தென்னிந்திய மீனவ மக்களுடன் இணைந்து இந்த கடற்பரப்பை பாதுகாக்கும் மாநாட்டை நடத்துவது அவசியம்.

அவ்வாறான ஒரு மாநாட்டை நடத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது வடக்கின் மீனவர்கள் உள்ளிட்ட தமிழ்நாடு மீனவர்களின் ஜீவனோபாயத்தை வலுவூட்டும்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மீனவ கைத்தொழில் வேறுபடும் நிலையில் வடக்கின் மீனவ தொழில் அதை விடவும் மாற்றமடையும் என அவர் சுட்டிக்காட்டினார்.

Green ocean திட்டம் மூலம் வடக்கின் கடற்பரப்பு பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேலும் தெரிவித்தார். (ந-7,10)


**வங்கி மீதி வசதி (Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (1176)

074 17 37 684

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-0586)

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

**V2 VISA SERVICES**
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0586)

**வேலையாட்கள் தேவை**

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் இயங்கிவரும் வீட்டுப்பாவனைப் பொருட்கள் உற்பத்தி நிறுவனத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. (1199)

தொடர்புகளுக்கு :

077 557 7750

**Job In**

அரச அங்கீகாரம் பெற்ற Pvt (ltd) Company யில் A/L படித்த (இளைஞர் யுவதிகளுக்கான) வேலைவாய்ப்பு முந்தும் 18 பேருக்கு முன்னுரிமை உடன் தொடர்பு கொள்ளவும். (1195)

070 50 88 241

**Show Money**

1%

லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான
வங்கி இருப்பு/ விசா சேவை (1192)

T.P : 075 033 6759


# மரண அறிவித்தல்

தோற்றம்
1942 - 11 - 20



மறைவு
2024 - 06 - 12

## மார்க்கண்டு சிவசுப்பிரமணியம் (இமாசி)

### (ஓய்வு நிலை ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி)

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிவசுப்பிரமணியம் 12.06.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சிவக்கொழுந்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தில்லைநாயகியின் பாசமிகு கணவரும் சிவநேசன் (உதவி ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களம் - கொழும்பு), சிவசங்கர் (விரிவுரையாளர் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம் - கொழும்பு), சிவதர்சினி (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திட்டமிடல் கிளை மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அஜந்தினி (Quantity surveyor - கொழும்பு), நியோமி (கொமர்ஷல் வங்கி - கொழும்பு), பிரபாகரமூர்த்தி (பிரதேச செயலாளர் மருதங்கேணி) ஆகியோரின் மாமனாரும் கலைமகள் (கனடா), பாலசுப்பிரமணியம் கைலாசபதி காலஞ்சென்ற நாமகள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவகரன், பவநிதா, அகரன், ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற விஜயநாதன் மற்றும் சபாநாதன் காலஞ்சென்ற லோகநாயகி சுந்தரலிங்கம் மற்றும் திருமங்கலநாயகி காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் ஞானதேவன் (பின்லாந்து) காலஞ்சென்ற இராஜநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2024) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் 11 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

271/6, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (1198) 021 222 8080

தகவல் :
குடும்பத்தினர்


**மேட்டுக் காணி விற்பனைக்குண்டு**

கிளாலிச் சந்தியில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் (2Km) தூரத்தில் ஆறு ஏக்கர் (6 ஏக்கர்) மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. அக்காணி நான்கு பக்கமும் 10 அடிக்கு ஒரு தூண் போட்டு ஏழு வரிக் கம்பி அடித்து கேற்றும் போட்டு பாதுகாப்பாகவுள்ளது.

தொடர்புகளுக்கு : (1191)

077 649 1027


**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**க.பொ.த(உ.த) 2021, க.பொ.த (உ.த) 2022 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான அறிவித்தல்**

எமது பாடசாலை பரிசளிப்பு விழா 29.06.2024 ஆம் திகதி நடைபெறவுள்ளதால் பாடசாலை பரீட்சார்த்தியாக தோற்றிய மாணவர்கள் 2021/2022, 2022/2023 கல்வி ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விபரங்களை (பாடநெறி, பல்கலைக்கழகம்) தங்களுடைய வகுப்பாசிரியரை அல்லது பகுதித்தலைவரை தொடர்பு கொண்டு 19.06.2024 இற்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

- அதிபர்

(C-0583)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1197)

**Golden Real Estate (pvt) Ltd**
077 029 4164,
077 329 4130, 077 294 1521


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org